**ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி**
**(தன்னாட்சி), சாத்தூர் -626 204**

(மதுரை காமராஜர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

இருபாலர், தன்னாட்சி மற்றும் மொழிவாரி சிறுபான்மைக்

கல்லூரி

தேசியத்தர மதிப்பீட்டின் 'A' தகுதி பெற்றது

**தமிழ்த்துறை**

**நடத்தும்**

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

**கருத்தரங்கத் தலைப்பு**

**'மானுடவியல் நோக்கில் தமிழ் இலக்கியங்கள்'**

**நாள் : 28.03.2021**

********

**கட்டுரையை பின்வரும் மின்னஞ்சல் அல்லது இணையம் மூலமாக சமர்ப்பிக்கலாம்.**

**Email:** anthropologysrnmc@gmail.com

**Website:** https://sites.google.com/view/anthropologysrnmc/

**தொடர்புக்கு**

**+91 9361965895, +91 8300820229,**

**புரவலர்**

**டாக்டர் T.R. தினகரன், செயலர்**

ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி

(தன்னாட்சி), சாத்தூர் - 626203.

**தலைவர்**

**முனைவர் சே.கணேஷ்ராம், முதல்வர்**

ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி

(தன்னாட்சி), சாத்தூர் – 626203

**ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் பி. ஸ்ரீதேவி**

தமிழ்த் துறைத்தலைவர் & உதவிப்பேராசிரியர்,

ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி

(தன்னாட்சி), சாத்தூர் - 626203.

**இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

**செல்வி பா.நாகேஸ்வரி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி

(தன்னாட்சி), சாத்தூர் - 626203.

**திருமதி நா.ரெங்கலட்சுமி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி

(தன்னாட்சி), சாத்தூர் - 626203.

**கருத்தரங்க அமைப்புக்குழு**

முனைவர் கி. நாகேந்திரன், உதவிப்பேராசிரியர்

திருமதி அ.முருகலட்சுமி, உதவிப்பேராசிரியர்

செல்வி ச.மோனிஷா, உதவிப்பேராசிரியர்

செல்வி பா.அன்னலட்சுமி, உதவிப்பேராசிரியர்

**ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி**

**தமிழ்த்துறை,**

வணக்கம்...

சாத்தூர் ஸ்ரீ.எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி (தன்னாட்சி) 50 ஆண்டுகளாக ஏழைகளின் கோவிலாகச் செயல்பட்டு வரும் கல்லூரி ஆகும். பொருளாதாரத்தில் பின்தங்கிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த கிராமப்புற மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இன்று மிகப்பெரிய கல்வி நிறுவனமாகப் பல்வேறு பாடப்பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சித் துறைகளுடன் விரிவடைந்து 4000 மாணவ மாணவியர்களைக் கொண்டு விருதுநகர் மாவட்டத்தில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. இத்தகைய கல்லூரியில் தமிழ்த்துறையானது தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தை வளர்க்கும் வண்ணம் பன்னாட்டுக் கருத்தரங்கம், தேசியக் கருத்தரங்கம், பயிலரங்கம், இணையவழிக் கருத்தரங்கம் என்று பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. தற்பொழுது **'மானுடவியல் நோக்கில் தமிழ் இலக்கியங்கள்'** என்னும் பொருண்மையில் இக்கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

மானுடவியல் என்பது மனித இனம் பற்றிய அறிவியல் கல்வித்துறை ஆகும். இது மனிதகுலத்தைச் சமூக நிலை, பண்பாட்டு நிலை, உயிரியல் நிலை, வரலாற்று நிலை போன்ற நிலைகளில் கடந்த கால மக்களையும், சமகால மக்களையும் ஆராயும் பரந்து விரிந்த இலக்குடையதாக உள்ளது. ஐரோப்பிய அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட மானுடவியல் ஆய்வுகள் அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதாரச் சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் ஒருபுறம் மக்களின் தனித்துவங்களையும் வேறுபட்ட பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் புரிந்துகொள்ள உதவுவதாகவும் இருக்கின்றது. மானுடவியல் மனித சமூகங்களின் நடத்தைகளுக்கு

காரணமான அடிப்படைக் கொள்கைகளை வெளிக்கொணர முயற்சிக்கிறது. வெளிப்படையான பரிணாமப் பார்வையை மனித நடத்தையை ஆய்வதற்கு பயன்படுத்துகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை ஒரு தொடர்ச்சியான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்ட பல்வேறுபட்ட சமூகக் குழுக்களும், குடிமரபுகளும், குலபிரிவுகளும் உடைய மானுடசமூகங்கள் வாழும் நிலவியல் தகவமைப்பைக் கொண்ட சூழல் பன்னெடுங்காலமாக நிலவிவந்துள்ளதைக் காணமுடிகின்றது. எனவே நமது மரபுகளையும், பண்பாட்டுப்பரிமாணங்களையும், தொழில்நுட்பங்களையும், அறிவியல் தன்மைகளையும் மீட்டுருவாக்கவும், சமூகங்களுக்கிடையேயான பொது குணங்களை, தனித்துவங்களை கண்டறியவும் தமிழ்ச் சூழலில் மானுடவியல் சார்ந்து குறிப்பிடத்தக்க அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த அடிப்படையில் மானுட வாழ்வியலை பிரதிபலிக்கின்ற இலக்கியங்களை பரிசோதித்து அவற்றில் வெளிப்படுகின்ற மானுடவியல் கூறுகளை கண்டுணர்த்தும் நோக்கிலும் இலக்கியங்களுக்கும் மானுடவியலுக்குமான உறவுநிலைகளை புலப்படுத்தவும் கீழ்காணும் பொருண்மைகளில் தரமான ஆய்வுக்கட்டுரைகளை வரவேற்கிறோம். மானுட சமூகங்களின்,

1. திருமணமுறைகள்
2. பாலியல் ஒழுக்கங்கள்
3. சமய நம்பிக்கைகள்
4. வாழ்வியல் சடங்குகள்
5. தொன்மங்கள்
6. குலகுறிகள்
7. உறவுமுறைகள்
8. பழக்கவழக்கங்கள்
9. பண்பாடு
10. மருத்துவம்
11. குடும்ப அமைப்பு
12. சமூக விதிகள்
13. கலைகள்
14. தொழில்நுட்பம்
15. அழகியல்
16. இனவரைவியல்
17. மொழி
18. வரலாறு
19. அறவியல்
20. பொருளாதாரம்
21. நிலவியல் சார்ந்த வாழ்வியல்
22. சமூகப் பறிமாற்றங்கள்
23. புழங்குபொருட்கள்
24. தடைகளும் தண்டனைகளும்
25. இயற்கை அறிவியல்
26. உணவுப் பழக்கவழக்கங்கள்
27. அரசியல்

இது போன்ற பிற மானுடவியல் கூறுகளையும் தமிழ் இலக்கிய வகைமைகளான சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, பயணஇலக்கியங்கள், நாட்குறிப்புகள், நாட்டுப்புற இலக்கியங்கள், பழங்குடியின வழக்காறுகள், கதைப்பாடல்கள், சங்க இலக்கியங்கள், அறஇலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், போன்றவற்றை ஆய்வுக்களமாகக் கொண்டு ஆய்வு செய்த தரமான ஆய்வுக்கட்டுரைகளை வரவேற்கின்றோம்.

**கட்டுரையாளர் கவனத்திற்கு...**

அனைத்துத் துறை சார்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வுக் கட்டுரையைச் சொற்கோப்பில் (Word Document) A4 தாளில் 1.5 இடைவெளியுடன் ஏரியல் யுனிக்கோடு (Arial Unicode) எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து anthropologysrnmc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு **15.03.2021** தேதிக்குள் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் இணையம் மூலம் கட்டுரை சமர்ப்பிக்கலாம். கட்டுரைகளுக்கு பக்க வரையறைகள் கிடையாது. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமையவேண்டும்.

ஆய்வுக் கட்டுரைகள் சொந்த, முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் அவசியம். தலைப்பு, ஆய்வுச் சுருக்கம் மற்றும் நூற்பட்டியல் முதலியன தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைய வேண்டும். ஆய்வுக் கட்டுரைகளில் ஆய்வு முறைப்படி குறிப்பு மற்றும் நூற்பட்டியல் இடம் பெற்றிருக்க வேண்டும்.

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வையும், ஆய்வு முடிவுகளையும் கட்டாயம் வாசித்தளிக்கவேண்டும். கருத்தரங்கில் கலந்துகொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும். ஆய்வு குறித்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல் மதிப்பீடாக அமையும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழில் வெளியிடுவதற்கு பரிந்தனுப்பப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் **சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care listed Journal)**, வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியீட்டிற்கு பரிந்துரைக்கப்படும். அக்கட்டுரைகள் மட்டுமே இணையத்தில் சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வுசெய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக ரூ.1500 ஆய்விதழுக்கு செலுத்த வேண்டும்.

**கருத்தரங்கில் பங்கேற்க பதிவுக்கட்டணம்**

**ஆய்வாளர்கள்: - ரூ.100,**

**பேராசிரியர்கள் மற்றும் ஆர்வளர்கள்: - ரூ.200**

**பதிவுக்கட்டணம், செலுத்தவேண்டிய வங்கிவிபரம்**

**The principal**
Sri SRNM College, Special Programme Ac
**Account no: 132150000000003**
Tamilnad mercantile bank ltd, Sattur.
IFSC CODE – **TMBL0000132**
MICR CODE – **626060402**

கருத்தரங்கில் பங்கேற்க விழையும் அனைவரும் பதிவுக்கட்டணம் செலுத்தி தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்த வேண்டும். தேர்வுசெய்யப்பட்ட கட்டுரைகளுக்குரிய வெளியீட்டுக்கட்டணத்தை ஆய்விதழ் பின்னர் பெற்றுக் கொள்ளும். **ஆய்வு சிறக்க வாழ்த்துகள்.**

**நன்றி.**

******

**கட்டுரை மாதிரிவடிவம்**

https://drive.google.com/file/d/1T62DzdbcZzAsQC4_J7fETqqsYcwkggs7/view?usp=sharing

**கட்டுரை சமர்ப்பிப்பதற்கான படிவம்**

https://forms.gle/Y45c6nsnz9MB8Ej26

**கருத்தரங்கில் பங்குபெறுவதற்கான படிவம்**

https://forms.gle/UumUqKswhVRbnTcG6